
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்

# மரபுரிமை மண்டபம்


these interesting func-
account of this unique
inauguration of this Institution
which has been during the last five years call-
ed the Hindu High School, Jaffna, and which
will, from this day, be known by the name of
the Jaffna Hindu College, in the upstair Build-
ing, erected by the Saiva Paripalana Sabai at
a cost of about Rs 10 000, and in the presence
of this large and distinguished assembly of
all parts of Jaffna.
ways attached the great-
llege in the sphere
en the means
education

the Hind

The Jaffn
Hindu Coll

தில்லைநாதன் கோபிநாத்

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்**
**மரபுரிமை மண்டபம்**

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்
# மரபுரிமை மண்டபம்

தில்லைநாதன் கோபிநாத்

ஜீவநதி வெளியீடு

ஜீவநதி வெளியீடு 164

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மரபுரிமை மண்டபம்
தில்லைநாதன் கோபிநாத்

முதற் பதிப்பு : புரட்டாதி 2020 | வெளியீடு : ஜீவநதி, கலை அகம், அல்வாய் | அட்டை வடிவமைப்பு : பிரசாத் சொக்கலிங்கம் | கட்டட வரைபடங்கள் : குணசிங்கம் சிவசாமி | அச்சுப்பதிப்பு : பரணீ அச்சகம், நெல்லியடி | பக்கங்கள் : 52 | விலை ரூ. 100.00

**Yaalppaanam Inthuk Kallooriyin Marapurimai Mandapam**

**Thillainathan Kopinath**

**First Edition : September 2020 | Publishers : Jeevanathy, Kalai Aham, Alvai | Cover Design : Prasad Sockalingam | Architectural Drawings : Kunasingham Sivasamy, B.Sc(B.E.) M.Sc.(Arch) RAIA | Printed by : Baranee Printers, Nelliady | Pages : 52 | Price Rs. 100.00**

**ISBN : 978-955-0958-52-8**

PUBLIC DOMAIN

*You can copy, modify, distribute and perform the text, even for commercial purposes, all without asking permission. (Images and drawings are copyrighted.)*

## சமர்ப்பணம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்
முதலாவது கட்டடத் தொகுதி உருவாக்கத்தில்
மிக முக்கிய பங்காற்றிய
**பசுபதிச் செட்டியார்**
அவர்களுக்கு
இச்சிறுநூல் சமர்ப்பணம்

## நூலாசிரியர்

தில்லைநாதன் கோபிநாத் (1982): ஆவணமாக்கச் செயற்பாட்டாளர்; வரலாற்று ஆய்வாளர். புங்குடுதீவைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் (2001). ஈழத்து ஆவணமாக்கச் செயற்பாடுகளில் 2004 முதல் ஈடுபட்டு வருகிறார். நூலக நிறுவனத்தின் தொடக்கம் (2005) முதல் பங்களித்து வரும் இவர் வாழ்க்கை வரலாற்றுக் கலைக்களஞ்சியம், யாழ்ப்பாணப் பத்திரிகைகள் ஆவணப்படுத்தல், ஓலைச் சுவடிகள் ஆவணப்படுத்தல், வாய்மொழி வரலாற்று ஆய்வு நிலையம் போன்ற செயற்றிட்டங்களில் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்துள்ளார். தமிழ் விக்கிப்பீடியாவின் ஆரம்ப காலத்தில் (2005) இணைந்து பங்களித்து ஒரு நிர்வாகியாகவும் செயற்பட்டுள்ளார். ஈழத்து வரலாறுகள், ஆவணகவியல் குறித்து எழுதிவருகிறார்.

இவரது ஏனைய நூல்கள்:

* தேன்மொழி இதழ்த் தொகுப்பு
* துடுப்பாட்டம் அன்றும் இன்றும்
* நமது வரலாற்றை நாங்கள்தான் ஆவணப்படுத்த வேண்டும்
* யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தொடக்கமும் வரலாறும்
* யாழ்ப்பாணப் பத்திரிகைகள் 1841-1900

இணையத்தளம்: www.kopinatht.com
மின்னஞ்சல்: kopinath@gmail.com

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| தலைமுறைகள் கடந்து வாழும் மண்டபம் | *9* |
| சைவர்களுக்கோர் ஆங்கிலப் பாடசாலை | *12* |
| தமிழர் தலைநிமிர் மண்டபம் | *16* |
| மண்டபங் கண்ட மாற்றங்கள் | *21* |
| கட்டட வரைபடங்கள் | *25* |
| எம்மன்னை நின்னலம் மறவோம் | *32* |
| நன்றிகள் | *38* |
| *பின்னிணைப்பு 1* | *40* |
| *பின்னிணைப்பு 2* | *46* |
| உசாத்துணை | *52* |

நன்றி

Debra Barton

சுஜீவன் தர்மரத்தினம்

அரவிந்தன் ரமணன்

உதயராசா ஜெல்சின்

சஜீவன் ராஜா

செந்தில்மாறன் இரத்தினம்

மயூரநாதன் இரத்தினவேலுப்பிள்ளை

குணசிங்கம் சிவசாமி

அகிலன் பாக்கியநாதன்

கதிர்காமநாதன் செல்வராஜா

பிரசாத் சொக்கலிங்கம்

பார்த்தீபன் குணரத்தினம்

ஜீவநதி

பரணீதரன் கலாமணி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

நூலக நிறுவனத்தினர்

*1*

# தலைமுறைகள் கடந்து வாழும் மண்டபம்

சுமார் நூற்று இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நாள். யாழ்ப்பாணத்தின் வண்ணை வைத்தீசுவரன் கோவிலில் இருந்து காங்கேசன்துறை நோக்கிச் செல்லும் பாதையில் நாம் செல்கிறோம். வைத்தீசுவரன் கோயிலைச் சுற்றி எழுந்த சுதேச நகரத்தின் தொழிற் கூடங்களைத் தாண்டி நடக்கிறோம். ஆங்காங்கே சிறு வீடுகள், குடிசைகள், சிறு கட்டடங்கள், நாவலர் பாடசாலை, விவசாயக் காணிகள். தலையிற் சுமையுடன் நடந்து செல்லும் மக்களைக் காண்கிறோம். இரட்டை மாட்டு வண்டில்கள் விரைந்து செல்கின்றன. குதிரை வண்டியொன்று நம்மைக் கடந்து யாழ்ப்பாண நகரை நோக்கிச் செல்கிறது.

நாம் தொடர்து வடக்கு நோக்கி நடக்கிறோம். வண்ணார் பண்ணையில் சிவலிங்கப் புளியடி தெரிகிறது. பாதையின் வலது புறத்தில் ஒரு வரகுக் காணியில் பெரும் கட்டடம் எழுந்து கொண்டிருக்கிறது. அப்பிரதேசத்தின் வழக்கமான சின்னஞ்சிறு கட்டடங்களிடையே மலைப்பூட்டும் வகையில் அந்தப் பெரிய மண்டபம் எழுந்து நிற்கிறது.

சுற்றி வரச் சுவர்களாலும் நடுவே ஒருவரால் கட்டிப்பிடிக்க முடியாத பெரும் வட்ட வடிவத் தூண்களாலும் தாங்கப்பட்ட பகர வடிவக் கட்டடம். இரண்டு மாடிகள். நடுவிலே மேலும் கீழுமாக இரு விசாலமான மண்டபங்கள். பகரத்தின் இரு புறங்களிலும் வகுப்பறைகள். பெரும் செவ்வகத் தூண்களால் தாங்கப்பட்ட விறாந்தைகள். நடுவே முற்றம். முற்றத்தின் இரு புறமும் மாடிக்குச் செல்லும் படிக்கட்டுக்கள்.

கட்டட வேலைகள் இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. நிலத்திலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட கண்ட கல்லு

குவிக்கப்பட்டிருக்கிறது. சுண்ணாம்பும் மணலும் குழைத்துக் கட்டடம் கட்டும் தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். தேக்கம் பலகைகளை அறுத்து மாடித் தளத்துக்குப் பொருத்தும் வேலைகளைச் சிலர் செய்தவாறு நிற்கின்றனர்.

சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க பெரியவர் ஒருவர் அங்கு நின்றிருக்கிறார். தினமும் தோய்த்துத் தோய்த்து சாம்பல் நிறமடைந்த எட்டு முழ வேட்டி. வாயில் வெற்றிலை. கட்டடப் பணிகளைக் கண்காணித்துக் கொண்டும் உதவி செய்து கொண்டும் சம்பளங்களை வழங்கிக் கொண்டும் கட்டடப் பொருட்களை மேற்பார்வை செய்தும் கணக்கு வழக்குகளைச் சரிபார்த்துக் கொண்டும் அவர் நிற்கிறார்.

அப்போது குதிரை வண்டிலிலே இன்னொரு பெரியவர் வந்திறங்குகிறார். நீளக்காற்சட்டை, மேற்சட்டை, தலைப்பாகை அணிந்த உத்தியோகபூர்வத் தோற்றம். பார்த்தால் ஓர் அரச அதிகாரி போலிருக்கிறார். அவரது வயதும் நாற்பதுகளில் இருக்கும் போலிருக்கிறது.

புதிதாக வந்தவர் கட்டடத்தினைப் பார்த்து மலைத்து நிற்கிறார்; அங்கே நின்றிருப்பவரோடு அளவளாவுகிறார்; கட்டடப் பணிகளைச் சுற்றிப் பார்க்கிறார்; மகிழ்ச்சியுடனும் வியப்புடனும் விபரங்களை அறிந்து கொள்கிறார். தூண்களின் அளவினைக் கைகளால் அளந்து பார்க்கிறார்.

அது ஒரு பாடசாலைக் கட்டடம். ஆயினும் வந்தவருக்கு ஒரு பாடசாலைக்கு ஏன் இத்தனை பெரிய கட்டடம் என்ற வியப்புக்கு விடை கிடைக்கவில்லை. அதற்குப் பொறுப்பாக நிற்பவரிடமே கேட்டு விட நினைக்கிறார்.

"செட்டியாரே, இத்தனை பெரிய தூண்களை அமைக்கிறீர்கள். இவற்றைப் பார்த்தால் மதுரையில் திருமலை நாயக்க அரண்மனையே நினைவுக்கு வருகிறது. ஒரு விதாலயத்துக்கு இத்தனை பெரிய கட்டடம் அவசியந்தானா?"

எப்போதும் புன்னகை பூத்த முகத்தினரான செட்டியாரின் முகத்தில் பெரியதொரு முறுவல் விரிகிறது.

"இக்கட்டடத்தினை நாம் இங்கே அமைப்பது ஓரிரண்டு தலைமுறையினர்க்காக அல்ல. இப்பாடசாலை பன்னெடுங்காலம் நிலைத்து நின்று எம் மாணவர்தம் கல்விக் கண்களைத் திறக்க வேண்டும். அதற்காகவே இத்தனை பெரிய தூண்களுடன் அமைக்கிறோம்" என்று பதிலளிக்கிறார் செட்டியார்.[1]

கேள்வி கேட்டவர் பின்னாளில் சேர் பட்டம் பெற்றவரான பொன்னம்பலம் இராமநாதன். பதிலளித்தவர் சைவ பரிபாலன சபையின் பொருளாளரான பசுபதிச் செட்டியார்.

அன்று பசுபதிச் செட்டியார் சொன்னது போலவே பன்னெடுங்காலம் நிமிர்ந்து இப்போது 125 ஆவது ஆண்டைத் தாண்டி நிற்கிறது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பிரார்த்தனை மண்டபக் கட்டடத் தொகுதியாக இப்போது அறியப்படும் பிரதான கட்டடத் தொகுதி.

அந்த மண்டபம் நூறாண்டு நிறைவுசெய்த காலத்தில் அத்தூண்களிடையே அமர்திருக்கும் பேறு பெற்ற யான் அதன் வரலாற்றினை 125 ஆவது ஆண்டில் கிடைத்த தகவல்களைக் கொண்டு இயன்றவரை இச்சிறுநூலில் பதிவு செய்கிறேன். அதன் வரலாற்று முக்கியத்துவம் கருதி "மரபுரிமை மண்டபம்" என்பதாக இந்நூலில் அழைக்கிறேன்.

---

1 இந்த நிகழ்வு 1930 ஆம் ஆண்டின் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் சேர் பொன் இராமநாதன் ஆற்றிய உரையில் கூறிய சில தகவல்களின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. (பசுபதிச் செட்டியார் நூற்றாண்டு நினைவு மலர் 1956)

## 2

# சைவர்களுக்கோர் ஆங்கிலப் பாடசாலை

மரபுரிமை மண்டபத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினை விளங்கிக் கொள்ளக் கல்லூரியின் தொடக்க கால வரலாற்றைத் திரும்பிப் பார்ப்பது அவசியமாக இருக்கிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிறித்தவ மிசனரிமாரால் ஆங்கில மொழிமூலமான நவீன கல்வி முறை யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. மெதடிஸ்த மிசன், புரொட்டஸ்தாந்து மிசன், றோமன் கத்தோலிக்க மிசன், அங்கிலிக்கன் மிசன் என பல மிசனரிகள் பெருமளவு பாடசாலைகளை உருவாக்கினர். எடுத்துக்காட்டாக யாழ் மத்திய கல்லூரி *(1816)* மெதடிஸ்த மிசனாலும் யாழ்ப்பாணக் கல்லூரி *(1823, 1871)* அமெரிக்க மிசனாலும் புனித பரியோவான் கல்லூரி *(1823)* அங்லிக்கன் மிசனாலும் புனித பத்திரிசியார் கல்லூரி *(1850)* றோமன் கத்தோலிக்க மிசனாலும் தொடங்கப்பட்டவை ஆகும்.

இந்தப் பாடசாலைகள் மூலமும் அவற்றோடிணைந்த அச்சகங்கள் போன்ற ஏனைய செயற்பாடுகள் மூலமும் ஆங்கிலக் கல்வி, விஞ்ஞானக் கல்வி, பெண்களுக்குக் கல்வி, மொழிபெயர்ப்புக்கள், அகரமுதலிகள், வைத்தியசாலைகள் எனப் பல்வேறு சேவைகளை மிசனரிகள் முன்னெடுத்தனர். ஆனால் இத்தனை சேவைகளையும் அவர்கள் செய்தமைக்கான அடிப்படையான காரணம் சுதேசிகளை மத மாற்றம் செய்வதே ஆகும். மிகவும் இளம் வயதில் நாளாந்தக் கல்வியுடன் மதத்தினையும் போதிப்பது மதமாற்றம் செய்வதற்கான வினைத்திறனான வழிமுறை என்பதனை உணர்ந்து அவர்கள் செயற்பட்டனர்.

அவ்வகையில் தமது மாணவர்கள் சைவசமயம் சார்ந்த

செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது என்பது அவர்களது அடிப்படை நிபந்தனையாக இருந்தது. வீபூதி அணிதல் போன்றவை முற்றாகத் தடை செய்யப்பட்டன[2]. பாடசாலைக்கு வெளியாலும் கூட அவர்களது சைவ சமயச் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாது என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. மாணவருக்கு ஆங்கிலப் பெயர்கள் வழங்கப்பட்டன. நாளாந்த கல்வியுடன் கிறித்தவ மதம் கற்பிக்கப்பட்டது. மாணவருக்கு விடுதி வசதிகள் வழங்கப்பட்டன. பாடசாலைக் காலத்தில் பெருமளவு மாணவர்கள் மதம் மாறினர். மதம் மாறியோருக்கு மிசனரிகளில் வேலை வழங்கப்பட்டது. மதம் மாறிய மாணவர்களிடையே மணம் செய்வித்துக் குடும்பங்கள் உருவாகுவது வரை மிசனரிமார் பங்களித்து வந்தனர்.

மிசனரிகளால் நவீன கல்வி, வேலை வாய்ப்புக்கள், அரச வேலைகள் போன்ற பல முன்னேற்றங்கள் கிடைத்தாலும் தமது சமயமும் மொழியும் பண்பாடுகளும் அழிக்கப்படுவதனை சுதேசிகள் உணர்ந்தனர். அந்தப் பண்பாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுக்கத் தொடங்கினர்.

ஆறுமுக நாவலர் உள்ளிட்ட பலர் பாடசாலைகளை நிறுவியும் அச்சகங்களை அமைத்துக் கண்டனங்களை எழுதி வெளியிட்டும் பிரசங்கங்கள் செய்தும் வாதங்களில் ஈடுபட்டும் பண்பாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிரான சுதேச எழுச்சியை உருவாக்கினர். மதம் மாறியோரை மீண்டும் தாய் மதத்துக்குத் திருப்பும் முயற்சிகளும் ஓரளவு வெற்றியளித்தன. கரோல் விசுவநாதபிள்ளை, சி. வை. தாமோதரம்பிள்ளை போன்றோர் மீண்டும் சைவ சமயத்துக்கு மாறியமை இவ்வகையானதே.

இத்தகைய சுதேச முயற்சிகளும் பாடசாலைகளும் ஓரளவு வெற்றியளித்தபோதும் மிசனரிகளுக்கு ஈடான ஆங்கிலக் கல்வியினை அவற்றால் வழங்க முடியவில்லை. மிசனரிகளுக்கு இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து மதம்

---

2 *Now I'm talking: Life lessons from a Telecommunications Pioneer* நூலில் யாழ்ப்பாணக் கல்லூரிச் சூழல் விபரிக்கப்பட்டுள்ளது.

மாற்றுவதற்காகவெனப் பெருமளவு நிதி தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. பிரமாண்டமான பாடசாலைகளை உருவாக்கி அவற்றைத் தொடர்ந்து நிர்வகித்துச் சிறந்த ஆசிரியர்கள் மூலம் சிறந்த கல்வியை வழங்க முடிந்தது. உள்ளூர் மக்களுக்கோ ஆங்கிலேய அரசாங்கத்திலும் அதன் வங்கிகள் போன்ற காலனித்துவ நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புக்களைப் பெற ஆங்கிலக் கல்வி அவசியமாக இருந்தது. அவ்வகையில் அவர்கள் தொடர்ந்தும் ஆங்கிலக் கல்வியினைப் பெற மிசனரிப் பாடசாலைகளையே நாடும் நிலை காணப்பட்டது.

இந்தச் சிக்கலை எதிர்கொள்ள சுதேசிகளும் ஆங்கிலப் பாடசாலைகளை உருவாக்க முயன்றனர். நாவலர் பாடசாலையில் 1882 இல் ஆங்கிலப் பாடசாலை உருவானமை இத்தகைய ஓர் எடுத்துக் காட்டாகும். சிறந்த ஆசிரியர்கள் இல்லாமை, அரச நிதியுதவி கிடைக்காமை, போதிய வசதிகள் இல்லாமை, போதிய மாணவர் இல்லாமை போன்ற பல காரணங்களால் இத்தகைய முயற்சிகள் தோல்வியடைந்தன.

இக்காலகட்டத்தில் 1886 இல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தலைமை ஆசிரியராக இருந்த வில்லியம் நெவின்ஸ் என்ற ஆங்கிலப் பெயரையும் கொண்டவரான முத்துக்குமாரர் சிதம்பரப்பிள்ளை மத்திய கல்லூரியிலிருந்து பெருமளவு மாணவர்களையும் சில ஆசிரியர்களையும் அழைத்துக் கொண்டு தனியான பாடசாலையினைத் தொடங்கினார். இதுவே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தொடக்கமாக அமைந்தது[3].

சிதம்பரப்பிள்ளை மத்திய கல்லூரியில் தனது மாணவர்களாக இருந்த நாகலிங்கம், பசுபதி, சபாபதி போன்றோரிடம் தமது பாடசாலையை ஒப்படைத்தார். இந்தப் பாடசாலையைப் பொறுப்பேற்கவும் ஏற்கனவே தொடர முடியாது நின்றுபோயிருந்த சைவப் பத்திரிகை வெளியீடு போன்ற நோக்கங்களை நிறைவேற்றவும் சைவ பரிபாலன சபை

---

3 கல்லூரியின் தொடக்க வரலாறு தொடர்பில் விரிவாக அறிய இந்நூலாசிரியரின் "யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தொடக்கம் வரலாறும்" நூலைக் காண்க..

உருவாக்கப்பட்டது. சிதம்பரப்பிள்ளையைக் கௌரவிக்கும் வகையில் இரண்டு நாட்கள் தொடர்ந்த பெருவிழாவொன்று நாகலிங்கம் முதலியோரால் நடாத்தப்பட்டது. 1890 இல் முறைப்படி சைவ பரிபாலன சபை பாடசாலையைப் பொறுப்பேற்றது.

ஏற்கனவே இப்படித் தொடங்கப்பட்ட ஆங்கிலப் பாடசாலைகள் தோல்வியில் முடிந்திருந்தன. 1894 ஆம் ஆண்டின் பரிசளிப்பு விழா அதிபர் அறிக்கையில்[4] "கடந்த காலத்தில் ஏனைய சுதேச ஆங்கிலப் பாடசாலைகள் தோல்வியில் முடிந்தன என்பதற்காக இந்தப் பாடசாலையும் தோல்வியில் முடிய வேண்டும் என்றில்லை" எனக் குறிப்பிடும் நெவின்ஸ் செல்வத்துரை பாடசாலை வெற்றியடைய என்ன தேவை என்பதையும் கவனப்படுத்தியிருந்தார்.

"இந்தப் பாடசாலை உயிர்வாழச் சிறப்பாகப் போராடி வந்துள்ளது. ஆனால் யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய கல்லூரிகளுடனும் பாடசாலைகளுடனும் நாம் போட்டி போட வேண்டியிருப்பதால் இந்தப் போராட்டம் இன்னும் வலுப்பெற வேண்டும். பாடசாலை தொடர வேண்டுமென்றால் அது பிள்ளைகளைக் கவர வேண்டும். பிள்ளைகளைக் கவர வேண்டுமென்றால் அவர்களுக்கு நல்ல கல்வியை அது வழங்க வேண்டும். அவர்களுக்கு நல்ல கல்வியை வழங்கப் பாடசாலைக் கட்டடத்துக்கும் நல்ல ஆசிரியர்களுக்கான சம்பளங்களுக்கும் பாடசாலை உபகரணங்களுக்கும் நிதி தேவை. பாடசாலை அரச நிதி பெறும் பாடசாலையாகப் பதிவாக வேண்டும். அதன் பிறகு பொதுமக்களுக்குப் பாடசாலையில் நம்பிக்கை வரும்."

---

4 The Hindu Organ. 1894-04-04.

# 3

# தமிழர் தலைநிமிர் மண்டபம்

மக்களின் நம்பிக்கையை வெல்லவும் போதிய மாணவரை ஈர்க்கவும் சிறந்த கல்வியை வழங்கவும் சிறந்ததொரு பாடசாலைக் கட்டடம் அவசியமாக இருந்தது. மிசனரிப் பாடசாலைகளுக்கு எந்த வகையிலும் சளைக்காத வகையில் அதனை உருவாக்க வேண்டிய தேவை இருந்தது. ஏற்கனவே பல ஆங்கிலப் பாடசாலைகள் தோல்வியடைந்த நிலையில் இன்னொரு தோல்வி ஏற்படாத வகையிலான ஓர் எழுச்சி உருவாக்கப்பட வேண்டி இருந்தது.

இப்போது யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அமைந்துள்ள பகுதியிலேயே முதலில் காணி வாங்கும் யோசனைகள் இருந்தது. சைவ பரிபாலன சபையின் பொருளாளராக இருந்த பசுபதிச் செட்டியார் மக்கள் செறிவாக வாழ்ந்த வண்ணார்பண்ணையில் பாடசாலை அமைய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்[5]. மாரிமுத்து உபாத்தியாயர் என்பவர் அரச ஏலத்தில் வரகு விளையும் காணி ஒன்றினை வாங்கியிருந்தார். வண்ணார் பண்ணையில் ஆறேகால் பரப்புள்ள அந்தக் காணி தொடர்பில் பசுபதிச் செட்டியாரின் உதவியை அவர் நாடியபோது அக்காணியினைச் சைவ பரிபாலன சபைக்கு விற்கப் பசுபதிச் செட்டியார் தூண்டினார். அவ்வகையில் சபையின் செயலாளரான காசிப்பிள்ளையின் பெயருக்கு அக்காணி மாற்றப்பட்டது[6]. இந்தக் காணியே பாடசாலையின் முதலாவது கட்டடத் தொகுதியின் அமைவிடமானது.

உரிய காணியினைப் பெறுவதற்குப் பங்காற்றியது போல கட்டட உருவாக்கத்திலும் பசுபதிச் செட்டியார் முக்கிய

5 பசுபதிச் செட்டியார் நூற்றாண்டு மலர். பக்கம் 9.

6 யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நூற்றாண்டு மலர். பக்கம் 29.

பங்காற்றினார். அவர் இந்தியா சென்றிருந்த காலங்களில் கட்டட வேலைகள் தடைப்பட்டு நின்றன[7] என்பதான இந்து சாதனப் பதிவுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

காங்கேசன்துறை வீதிக்குக் கிழக்குப் பக்கமாகக் காணி அமைந்திருந்தமையால் கட்டடம் மேற்கு வாசல் கொண்டதாக உருவாக்கப்பட்டது. நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் கிடைக்கும் வகையில் உயரமான தளங்களுடனும் போதிய சாளரங்களுடனும் முற்றத்துடனும் அது திட்டமிடப்-பட்டது. *1891* ஆம் ஆண்டு மே மாதம் *4* ஆம் திகதி கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

கட்டடம் பகர வடிவத்தில் இரண்டு மாடிகளில் உருவானது. கீழ்த்தளமானது இரண்டடி அகலமான சுவர்களால் சுற்றி வரவும் இரண்டடி விட்டமுள்ள தூண்களால் நடுவிலும் தாங்கப்பட்ட வகையில் உருவானது. குறுக்கு மரங்கள் பொருத்தப் பட்டு அதில் மேல்மாடித் தளம் மரத்தளமாக அமைக்கப்பட்டது. மேல்மாடிக் கூரை வரை சுவர்கள் உயர்த்தப்பட்டன. கீழ்மாடித் தூண்களின் மேல் மரத்தூண்கள் பொருத்தப்பட்டுக் ஓட்டுக்கூரை தாங்கப்பட்டது. *(26 ஆம், 27 ஆம் பக்கங்களைப் பார்க்க)*

பகர வடிவத்தின் இரு பக்கங்களிலும் வீதியிலிருந்து வாசல்கள் அமைக்கப்பட்டன. இந்த வாசல்கள் ஒரு சிறு வரவேற்பறைக்குள் திறந்தன. வரவேற்பறைகளின் இரு புறமும் களஞ்சிய அறைகள் இருந்தன. வரவேற்பறைகளைத் தாண்டி உள்ளே விசாலமான அலுவலக அறைகள் காணப்பட்டன.

பகரத்தின் நடுவில் விசாலமான முற்றம் அமைக்கப்பட்டது. முற்றத்தினைச் சுற்றி இரண்டடிக்கு மூன்றடித் தூண்களால் தாங்கப்பட்ட பல்கணி அமைக்கப்பட்டது. முற்றத்துக்கான பெரிய வாசலின் இருபுறங்களிலும் மேல்பாடிக்குப் பல்கணி வழியாகச் செல்ல படிக்கட்டுக்கள் அமைக்கப்பட்டன. படிக்கட்டுக்களின் கீழும் களஞ்சிய அறைகள் அமைக்கப்பட்டன.

---

7 The Hindu Organ. 1895-06-26.

முற்றத்தைத் தாண்டிச் செல்ல (பகரத்தின் அடியில்) மேல்மாடியிலும் கீழ்மாடியிலும் விசாலமான மண்டபங்கள் (பருமட்டாக 32 அடிக்கு 72 அடி) அமைக்கப்பட்டன. மண்டபங்களில் இரு அந்தங்களிலும் மாடிகளை இணைக்கும் குறுகலான படிகள் அமைக்கப்பட்டன. கீழ்மாடியில் தெற்குப் புறமாக பருமட்டாக ஒன்பது அடிக்குப் பதினைந்து அடி மேடை உருவானது. மண்டபத்துக்கு வடக்கே இரண்டு வகுப்பறைகளும் தெற்கே மூன்று வகுப்பறைகளும் அமைந்தன. அவ்வகையில் இரு மாடிகளிலும் சேர்த்து மண்டபங்களை அண்டிப் பத்து வகுப்பறைகள் இருந்தன. மேலும் இரு வகுப்பறைகள் அலுவலக அறைகளுக்கு மேல் அமைந்தன.

மண்டபத்துக்குக் கிழக்கே ஒன்றரை அடிக்கு ஒன்றரை அடித் தூண்களால் தாங்கப்பட்ட நீண்ட விறாந்தை உருவாக்கப்பட்டது. கிழக்குப் பக்கமாக கீழ்த்தளத்துக்கு மூன்று கதவுகளும் மேல்மாடிக்குச் செல்ல இரு புறமும் படிக்கட்டுக்கள் கொண்டதாக மாடிப்படிகளும் அமைக்கப்பட்டன.

இவ்வாறாக இரண்டு வரவேற்பறைகள், ஆறு களஞ்சிய அறைகள், இரண்டு அலுவலகங்கள், பன்னிரண்டு வகுப்பறைகள், இரண்டு மண்டபங்களுடன் கூடியதாகப் பாடசாலையின் முதலாவது கட்டடத் தொகுதி மிகவும் சமச்சீராக உருவானது.

இக்கட்டமானது கட்டடக்கலை சார்ந்து நவசெந்நெறிவாத ஒழுங்கமைவைக் கொண்டது எனப் பாக்கியநாதன் அகிலன் குறிப்பிடுகிறார்[8]. ரோமானிய, விக்ரோறிய காலத்து ஆங்கிலக் கட்டடக்கலையின் பண்புகளை இக்கட்டடத்தில் இனங்காண முடிகிறது. அதே வேளை மேல்மாடித் தூண்கள் திராவிடக் கட்டடக்கலையைச் சேர்ந்த எட்டுப்பட்டைத் தூண்களாக உள்ளன. மேற்கத்தையே உள்ளூர்ப் பண்பாடுகளின் கலப்பாக இக்கட்டடம் உள்ளது எனலாம். ரோமானியக் கட்டடக்கலை அம்சங்களே அதிகளவில் காணப்படுகின்றன என்றும் கருதலாம்.

8 அகிலனின் முழுமையான கட்டுரை இந்நூலில் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது.

1891 இல் அடிக்கல் நாட்டப்பட்டாலும் கட்டடத்தைக் கட்டி முடிக்க நான்கு ஆண்டுகள் ஆனது. செட்டிமாரிடமும் வர்த்தகரிடமும் மட்டுமின்றி வீடுவீடாக வீட்டுக்கொரு தேங்காய் என்பதான திட்டங்கள் மூலமும் நிதி திரட்டப்பட்டது. "இவ்வித்தியாசாலை சைவர்கள் எவர்க்கும் சொந்தமாக வுள்ளதேயன்றி, இப்போது முயற்சியாக நின்று நடத்துபவர்களுக்குச் சொந்தமென்று எவரும் நினைக்க வேண்டியதில்லை. இதிலபிமானமுள்ள எவரும் வந்துநின்று நடாத்திவிருத்தி செய்ய உரிமை உண்டு" எனக் குறிப்பிட்டு[9] நிதியுதவிகள் கோரப்பட்டன. யாழ்ப்பாணம் மட்டுமின்றிக் கொழும்பு, காலி, கண்டி, மாத்தளையிலிருந்தெல்லாம் நிதியுதவிகள் வழங்கப்பட்டன. கொழும்பு, யாழ்ப்பாணம், காலி, கண்டியிலிருந்து நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் நிதியுதவி வழங்கினர்[10].

சுமார் நான்காண்டுகளின் முடிவில் பிரதான மண்டபங்களையும் அதனை அடுத்த வகுப்பறைகளும் உருவான நிலையில் 1895-08-23 அன்று இக்கட்டடத்துக்கான புகுமனை புகுவிழா நடைபெற்றது. இதுவே இதன் உண்மையான தொடக்க நாள் ஆகும்.

ஆயினும் மிகுதி வேலைகளை முடிக்க 1895-09-14 அன்று ஒரு பணச் சடங்கு திட்டமிடப்பட்டது. அதற்கு சட்ட நிரூபண சபை உறுப்பினரான பொன்னம்பலம் குமாரசுவாமி அதற்கு வர ஒத்துக் கொண்டிருந்தார்[11]. குறித்த தினத்தில் அவர் வர முடியாமற் போக 1895-09-28 அன்று நாள் குறிக்கப்பட்டது.

அவ்வகையில் 1895-09-28 அன்று கோலாகலமான விழா நடைபெற்றது. ஆயிரக்கணக்கானோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர். இவ்விழா ஒரு பணச்சடங்காகவே திட்டமிடப்பட்ட போதும் குமாரசுவாமிக்குக் கௌரவமளிக்கும் வகையில் மீண்டும் ஒரு திறப்புவிழாவாக நடாத்தப்பட்டது. இரவு ஒன்பது மணியளவில் குமாரசுவாமி ஒரு வெள்ளித் திறப்பினால் பிரதான

9 The Hindu Organ 1895-08-08

10 The Hindu Organ 1895-07-10, The Hindu Organ 1895-07-24

11 The Hindu Organ 1895-09-04

கதவினைத் திறந்து வைத்தார். குமாரசுவாமியுடன் அவரது மைத்துனர் இரத்தினசபாபதியும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார். சைவ பரிபாலன சபையின் சபாபதி வரவேற்புரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து சைவ பரிபாலன சபையினர் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தனர்[12]. அவ்வறிக்கையில் குறித்த நாளில் பாடசாலைக்கு *Jaffna Hindu College* என்ற பெயர் மாற்றமும் செய்யப்பட்டது. அவ்வறிக்கை முழுமையாக இந்நூலின் பின்னிணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது. பின்னர் நாகலிங்கம் உரையாற்றினார்.

1895-09-28 என்பது சம்பிரதாயபூர்வமான திறப்புவிழா நடந்த நாள் என்ற போதும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்ற தற்போதைய பெயர் சூட்டப்பட்ட நாள் என்ற வகையில் முக்கியத்துவம் பெறுகிறது. செப்ரெம்பர் 28 யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நாள் எனக் குறிப்பிட்டுக் கொண்டாடத்தக்க நாள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 'தமிழர் தலைநிமிர் கழகம்' எனக் குறிப்பிடப்படுவதுண்டு. பண்பாட்டு ஆக்கிரமிப்பு எதிராகத் தலைநிமிர்ந்த கழகமாக அது எழுந்தது என்பது மிகையான கூற்றல்ல. அந்தத் தலைநிமிர் எழுச்சியின் தொடக்கமாக அமைந்தது இந்த முதலாவது கட்டடத் தொகுதியே ஆகும்.

இந்தக் கட்டடத்தின் எழுச்சியானது பாடசாலையைத் தோற்றுவிட முடியாத, தோற்க விட முடியாத ஒன்றாக மாற்றியமைத்தது. அத்தனை பெரியதொரு சைவப் பாடசாலையாக அது கட்டியெழுப்பப்பட்டமை யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தின் பெருமிதமாக, அச்சமூகத்தின் பொறுப்பாகப் பாடசாலையை மாற்றியது. இந்தக் கட்டடம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு பிரகாசமான, தோல்வியடைய வாய்ப்பில்லாத ஓர் எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுத்தது.

அவ்வகையில் தமிழரைத் தலைநிமிர்த்திய மண்டபம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இந்த மரபுரிமை மண்டபம்.

12 The Hindu Organ 1895-10-02

# 4

# மண்டபங் கண்ட மாற்றங்கள்

*1890* களில் கட்டப்பட்ட அடிப்படை வடிவமைப்பு இப்போதும் அதே மாதிரியாக உள்ளபோதும் காலத்துக்குக் காலம் குறிப்பிடத்தக்க பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் முதலாவதும் பிரதானதுமான மாற்றமாக அமைவது ஞானசேகரம் மண்டபம் பிரதான கட்டடத் தொகுதியுடன் இணைக்கப்பட்டமை ஆகும். ப வடிவக் கட்டடம் પ வடிவக் கட்டடமாக மாறும் வகையில் இந்த முதலாவது மாற்றம் அமைந்தது. இந்த மாற்றம் ஆரம்பக் கட்டடத் தொகுதி உருவாகிச் சில ஆண்டுகளில் செய்யப்பட்டது என்ற வகையிலும் அதேவிதமான கட்டடப் பாணியினைப் பின்பற்றியுள்ளது என்பதாலும் அது பிரதான கட்டடத் தொகுதியுடன் சேர்ந்ததாக இப்போது நினைக்கப்படுகிறது. அது இரண்டாவது கட்டத்தில் அமைக்கப்பட்டதாயினும் அதுவும் நூறாண்டுகளைக் கடந்த ஒன்றாகவே உள்ளது.

சி. ஞானசேகரம்[13] என்பவர் *(C. Gnanasakaram)* வரையறுக்கப் பட்ட இந்தியத் தேசிய வங்கியின் *(National Bank of India Ltd)* கொழும்புக் கிளையின் பிரதான காசாளராக இருந்தவர். இவரது முயற்சியில் வடமேற்கு மூலையில் மேற்குறிப்பிட்ட கட்டடத் தொகுதி இணைத்துக் கட்டப்பட்டது. இந்த இணைப்பின் போது முதன்மைக் கட்டடத்தின் பின்

---

13 இவர் ஞானசேகரமா ஞானசாகரமா என்பது உறுதியாகத் தெரியவில்லை. தமிழ்ப் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதிப் பின்னர் மீண்டும் தமிழாக்கியதில் பல பெயர்கள் இப்போது தவறான பாவனையில் உள்ளன. அதிபர் செல்வத்துரையின் பெயர் *Selvadurai* ஆகிச் செல்லத்துரை ஆனதும் அதிபர் சபாரத்தினசிங்கத்தின் பெயர் *Sabaratnasinghe* ஆகிப் பின்னர் சபாரத்தினசிங்கி ஆனதும் இத்தகைய பெயர்க் குழப்பங்களே.

விறாந்தையின் வடக்குப் பகுதி நீக்கப்பட்டதோடு கட்டடத்தின் வடமேற்கு மூலைக் கூரை அமைப்பிலும் மாற்றங்கள் செய்யப்பட்டது. இந்த இணைப்புக் கட்டடம் பிரதான கட்டடத்தின் வகுப்பறைகளின் அகலத்துடன் அதே அளவுப் பிரமாணங்களைப் பயன்படுத்தியே அமைக்கப் பட்டமை கவனிக்கத்தக்கது.

இந்தக் கட்டடப் பகுதியானது ஞானசேகரம் மண்டபம்[14] *(Gnanasakaram Hall)* என்று பெயரிடப்பட்டு *1908* ஆம் ஆண்டு அப்போதைய தேசாதிபதி ஹென்றி மக்கலம் பாடசாலைக்கு வந்த போது சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இது சம்பிரதாயபூர்வமான திறப்புவிழாவே. மண்டபம் முன்னரேயே பாவனைக்கு வந்திருந்ததாகவே ஊகிக்க முடிகிறது.

இவ்வாறு திறந்து வைக்கப்பட்டபோது பாடசாலையின் முன்பகுதியில் திறப்புவிழா செய்யப்பட ஏதுவாக இடதுபுற வாசலினூடான வரவேற்பறையில் ஞானசேகரம் மண்டபம் திறந்துவைக்கப்பட்டதான கல்வெட்டுப் பொறிக்கப்பட்டது. அவ்வகையில் பிரதான கட்டடத்தின் அறைச்சுவர்களிடையே கதவுகள் அமைக்கப்பட்டு பின்பகுதியில் ஞானசேகரத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட மண்டபம் வரை செல்லக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆயினும் ஞானசேகரம் மண்டபம் என்பது பகர வடிவத்துக்கு வெளியே அமைக்கப்பட்ட பகுதியே ஆகும்.

ஞானசேகரம் மண்டபத்துக்கு எதிர்புறத்தில், அதாவது கட்டடத் தொகுதி சமச்சீராக H வடிவமாகும் வகையில், ஆனால் மேல்மாடி இல்லாத வகையில், சில அறைகள் பின்னர் இணைக்கப்பட்டன. இவ்வாறு அமைக்கும்போது பின் விறாந்தையின் தெற்குப்பகுதி நீக்கப்பட்டது. ஞானசேகரம் மண்டபத்துக்கும் புதிய அறைகளுக்குமிடையில் நடுவில் திறந்தவெளி மேடை ஒன்றும் அமைக்கப்பட்டது. இந்த

---

14 "Gnanasakaram Hall. Erected by Mr. C. Gnanasakaram. Chief Cashier. National Bank of India Ltd. Colombo. 1908" எனக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

மேடையில் தற்காலிகக் கூரை அமைக்கக் கூடியவகையில் தூண்களை நிறுவக்கூடிய துளைகள் இடப்பட்டிருந்தன என்பதால் இந்த மேடை பெருமளவானோர் கலந்து கொள்ளும் திறந்தவெளி அரங்கமாகப் பயன்பட்டது எனத் தெரிகிறது.

H வடிவத்துக்கு ஒரு நீண்ட காலை இணைத்தது போல கல்லூரி வீதி எல்லையில் சுவரைக் கொண்ட ஒரு திறந்த வகுப்பறைத் தொகுதியும் பின்னர் இணைக்கப் பட்டது. (இந்த நீண்டகாலுக்குச் சமாந்தரமாகவே ஞானசேகரம் மண்டபத்தை அடுத்து வைரவர் கோயிலும் அமைக்கப்பட்டது. அதாவது பாடசாலையின் கட்டட அமைப்பில் சமர்ச்சீர்த்தன்மை தொடர்ந்து நீண்டகாலமாகப் பேணப்பட்டு வந்தது) இந்த அறைகள், திறந்த வகுப்பறைகள் கொண்ட இணைப்புக் கட்டடம் 2010 களில் இடிக்கப்பட்டு அந்த இடத்தில் புதிய நிர்வாகக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நிர்வாகக் கட்டட அமைப்பின்போது நூறாண்டுகளுக்கு மேலாக மரபார்ந்து பேணப்பட்டுவந்த சமர்ச்சீர்த்தன்மை பின்பற்றப்படவில்லை. திறந்தவெளி மேடையின் ஒரு பகுதியும் இடிக்கப்பட்டது. தெற்கு விறாந்தைப் பகுதியும் எந்தப் புனரமைப்பும் செய்யப்படாமல் விடப்பட்டு அரைகுறையாகப் பல ஆண்டுகளாகக் (2020 இலும்) காட்சியளிக்கிறது.

பிரதான கட்டடத்தின் கூரை அக்காலத்தில் பரவலான பாவனையில் இருந்த அரைவட்ட வடிவப் பீலி ஓடுகளால் அமைக்கப்பட்டது என்று ஊகிக்க முடிகிறது. ஆயினும் பிற்காலத்தில் புனரமைப்புக்கள் செய்தபோது பீலி ஓடுகளுக்குப் பதிலாகக் கோழிக்கோட்டு ஓடுகள் பொருத்தப்பட்டுள்ளன.

கட்டடத்தின் முன்பகுதியில் விறாந்தைக்கு மேலே இருந்த பல்கணிப் பகுதியும் 1970 கள் வரை மரத்தாலான தரையினைக் கொண்டதாகவே இருந்தது. அக்காலத்தில் செய்யப்பட்ட புனரமைப்பின்போது அந்தத் தளப்பகுதி சீமெந்து கொண்டு அமைக்கப்பட்டது. அவ்வாறு அமைப்பதற்கு ஏதுவாக தரைத்தளத்திலிருந்து சுவருடன் இணைந்ததாக உள்ளே இரும்புக் கம்பிகளைக் கொண்ட சீமெந்துத் தாங்கு தூண்கள்

எழுப்பபப்பட்டுள்ளன. சுண்ணாம்புக் கட்டட அமைப்புடன் சீமெந்து பூசமுன்னர் அனுபவமுள்ள கட்டடக் கலைஞர்களின் ஆலோசனை பெறப்படாமல் இந்தப் புனரமைப்புச் செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது. இந்தத் தூண்களிலேயே இப்போது வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளது. அதாவது 125 ஆண்டுகளைக் கடந்துள்ள ஆரம்பகாலக் கட்டடப் பணி இப்போதும் உறுதியாக நிற்கையில் ஐம்பதாண்டுகளிலும் குறைவான காலத்துக்கு முன்னர் செய்யப்பட்ட சீமெந்து வேலைகள் உறுதியற்றதாக உள்ளன. இவ்வாறு பின்னர் செய்த புனரமைப்புக்களில் உருவான பிரச்சினைகளால் கட்டடம் சிதைவடையத் தொடங்கியுள்ளதென்ற எண்ணமும் பரவலாக ஏற்பட்டுள்ளது. ஆயினும் இது உண்மையல்ல. மிகவும் கவனமாகப் புனரமைப்புச் செய்து சீமெந்துப் பல்கணித் தளத்தினை அகற்றி பழைய நிலைக்கு மீளமைப்பதே பொருத்தமானதென கட்டடக் கலைஞர் சி. குணசிங்கம் கருதுகிறார். விரைவில் வெளிவரவுள்ள அவரது அறிக்கையில் இவ்விடயங்களை அவர் தெளிவாக முன்வைக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


மேல்மாடியில் அமைந்துள்ள மேடை ஆரம்பத்தில் இருக்காமல் பின்னர் இணைக்கப்பட்டதென ஊகிக்க முடிகிறது. குறிப்பாக மேடைக்குப் பின்னால் வாசலொன்று உள்ளது. ஆயினும் இந்த மேடை சுமார் நூறாண்டுகளுக்கு முன்னரேயே அமைக்கப்பட்டுவிட்டது. முதலாம் உலகப்போர்க் காலத்தில் கல்விகற்றவரான அமரர் வே. தில்லையம்பலம் இந்த மேல்மாடியே பிரார்த்தனை மண்டபமாக இருந்ததையும் மாணவர் ஒருவர் மேடை மேல் ஏறித் தேவாரமும் புராணமும் பாடியதையும் பதிவு செய்துள்ளார்.[15]

கீழ்மாடி மண்டபம் இப்போது பிரார்த்தனை மண்டபம் என அழைக்கப்படுவடுவது பெருவழக்காக உள்ளது. ஆனால் உண்மையில் அதுவே கல்லூரியின் பிரதான மண்டபமாக அறுபது ஆண்டுகள் பயன்பாட்டில் இருந்தது. கல்லூரியின் பரிசளிப்பு


---

15 யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நூற்றாண்டு மலர். பக்கம் 101.


படமூலம் : சிவசாமி குணசிங்கம்




**FRONT ELEVATION (KANKESANTHURAI ROAD VIEW)**





படம் : சிவசாமி குணசிங்கம்




படம் : சிவசாமி குணசிங்கம்

பட மூலம் : சிவசாமி குணசிங்கம்




**REAR ELEVATION (VIEWED FROM COURTYARD)**

விழாக்கள் உள்ளிட்ட அனைத்து விழாக்களும் அங்கேயே நடந்தன. விழாக்களின் போது மண்டபம் நிறைந்து வழிந்து வெளி விறாந்தைகளிலும் மக்கள் கூடி நின்றதை இந்து சாதனம் இதழ்கள் பதிவு செய்துள்ளன. விவேகானந்தர், மகாத்மா காந்தி போன்றோர் அந்த மண்டபத்தில் உரையாற்ற நேர்ந்ததும் அது பிரதான மண்டபம் என்பதாலேயே ஆகும். 1950 களின் பின்னர் குமாரசாமி மண்டபம் பாவனைக்கு வந்த பின்னர் இந்த மண்டபத்தின் பாவனை குறைந்தது. பிரார்த்தனை மண்டபமாக அது அறியத் தொடங்கப்பட்டது அதன் பின்னரேயே. மேடையில் சுவாமி வைக்கும் இடம் உருவாகியதும் பிற்காலத்திலேயே ஆகும். பிரார்த்தனை மண்டபம் எனக் குறிப்பிடுகையில் அந்த மண்டபத்தின் வரலாற்று முக்கியத்துவம் முழுமையாக வெளிப்படவில்லை. அவ்வகையில் இந்த மண்டபம் மரபுரிமை மண்டபம் அல்லது பிரதான மண்டபம் எனக் குறிப்பிடப்படுவது பொருத்தமானது என்பதால் இந்நூல் "யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மரபுரிமை மண்டபம்" என்பதாகப் பெயரிடப்பட்டுள்ளது. இக்கட்டடத் தொகுதி மரபுரிமைக் கட்டடம் என்பதாகக் குறிப்பிடுவதும் பொருத்தமாக இருக்கும்.

பின் விறாந்தையில் நடுவாசலுக்கு இருபுறமும் விறாந்தை சுவர்களால் தடுத்துக் கட்டப்பட்டு நடுவாசலுக்கு இருபுறத்திலும் இரு அறைகள் அமைக்கப்பட்டிருந்தன. 1990 களில் இவை சாரணர் அறையாகவும் கடற்சாரணர் அறையாகவும் பயன்படுத்தப்பட்டன. இந்த அறைகள் அமைக்கப்பட்டமையால் கீழ் மண்டபத்திற்கு வெளிச்சம் சற்றுக் குறைந்த நிலை காணப்பட்டது. பிற்காலத்தில் செய்யப்பட்ட புனரமைப்பின் போது இந்தச் சுவர்கள் நீக்கப்பட்டு விறாந்தை பழைய நிலைக்கு மீளமைக்கப்பட்டுள்ளது.

மேல்மாடியின் தரைப் பலகைகள் அதிக பயன்பாட்டில் இருந்த பகுதிகளிலும் பயன்படாமல் விடப்பட்ட பகுதிகளிலும் காலத்துக்குக் காலம் சிதைவடைந்து வந்துள்ளன. புனரமைப்புச் செய்யப்பட்டபோது அந்தப் பலகைகள் நீக்கப்பட்டுப் புதிய பலகைகள் பொருத்தப்பட்டு வந்துள்ளன. கீழ் மண்டபத்திலிருந்து

மேல்மண்டபத்துக்குச் செல்லக்கூடிய வகையில் மண்டபங்களின் இரு அந்தங்களிலும் அமைக்கப்பட்டிருந்த குறுகலான மாடிப் படிகளைப் பாவிக்க முடியாத வகையில் பலகைத்தளத்தால் மூடப்பட்டு விட்டது. குறுகலான படிகளில் ஏறி இறங்குவது மாணவருக்கு ஆபத்தாக இருந்தமையால் இந்த மாற்றம் செய்யப் பட்டது என விளங்கிக் கொள்ளலாம்.

1960 களில் புதிய நிர்வாகக் கட்டடம் அமைக்கப்பட்டுக் கல்லூரி வீதியினூடாகவே பாடசாலையின் பிரதான நுழைவுப் பாதை மாற்றியமைக்கப்பட்டது. இதன் பின்னரேயே காங்கேசன் துறை வீதியில் அமைந்திருந்த இரு கதவுகளும் மூடப்பட்டுச் சுவர்களால் முழுமையாக அடைக்கப்பட்டு விட்டன. இவ்வாறு பிரதான வாசல்கள் மூடப்பட்டதால் அந்த வாசலைத் தாண்டி அமைந்திருந்த வரவேறு அறைகளும் அந்த வரவேற்பு அறைகளின் இருபுறமும் அமைந்திருந்த அறைகளுமாக ஆறு அறைகள் உள்ளிருந்து பயன்படுத்தப்படும் களஞ்சிய அறைகளாக மாற்றமடைந்தன. அனைவரும் முதலில் காலடி வைப்பதாக அமைந்த முன் அறைகள் மிகச் சிலரே பாவிக்கும் பின் அறைகளாகின. (முன் அறை என்பதால் பொருத்தமில்லாத இடத்தில் பொறிக்கப்பட்ட ஞானசேகரம் மண்டபத் திறப்புக் கல்வெட்டு யாரும் கண்படாத இடத்துக்குச் சென்று விட்டது.)

இவை தவிர காலத்துக்குக் காலம் பல்வேறு சிறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. வெளியே முன் முற்றத்தில் உள்ள சிறு குளம் பிற்காலத்தில் அமைக்கப்பட்ட ஒன்றே. கட்டடத்தின் வடக்குப் பகுதியில் களஞ்சிய அறையொன்றுக்கும் வகுப்பறை ஒன்றுக்கும் வடக்குப் பகுதியினால் நுழையக் கூடிய வகையில் கதவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஞானசேகரம் மண்டபத்தின் மேல்மாடியினை பிரதான மண்டபத்தின் வகுப்பறை ஒன்றினூடாகவே நுழைந்து பயன்படுத்தக்கூடிய நிலை பெருமளவு ஆண்டுகள் நீடித்தது. 1990 களில் வெளிப்புறத்தால் நுழையக்கூடிய வகையில் விறாந்தையிலிருந்து மரத்தாலான மாடிப் படிகள் அமைக்கப்பட்டன.

பிரதான மண்டபம் பிரார்த்தனை மண்டபமாகியது போல

இக் கட்டடத் தொகுதியின் அறைகளும் பகுதிகளும் காலத்துக்குக் காலம் வெவ்வேறு வகைகளில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. மேல்மாடி மண்டபம் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு வகுப்பறைகளாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. கீழ்மண்டபம் பிரார்த்தனை மண்டபமாகிய பிறகு இந்தப் பயன்பாடு சாத்தியமாகியிருக்கலாம். மேல்மண்டபத்தின் மேடையே கூட ஒரு வகுப்பறையாக இருந்துள்ளது.

ஏற்கனவே குறிப்பிட்டது போல காங்கேசன் துறை வீதி வாசல்கள் கைவிடப்பட்டதும் வரவேற்பு அறைகள் களஞ்சியங்க-ளாகின. பிரதான முன்னறைகள் இரண்டும் வகுப்பறைகளாகின. ஆரம்பகாலத்தில் நிரந்தர வகுப்பறைகளாகப் பயன்பட்ட இந்தக் கட்டடத் தொகுதியின் அறைகள் பிற்காலத்தில் வகுப்புக்களுக்குத் தனியான கட்டடத் தொகுதிகள் அமைக்கப்பட்டதும் சிறப்பு வகுப்புக்களாகப் பயன்படலாயின. இசை, ஓவிய வகுப்புக்களாக மேல்மாடி வகுப்பறைகள் பயன்படுத்தப்பட்டன. கீழ்மாடியின் வகுப்பறைகள் பல விஞ்ஞான ஆய்வுகூடங்களாகப் பயன் பட்டன. ஞானசேகரம் மண்டபத்தின் கீழ்மாடி இரசாயனவியல் ஆய்வுகூடமானது. ஞானசேகரம் மண்டப மேல்மாடி ஒரு காலத்தில் விடுதியாகவும் பயன்பட்டுள்ளது. பிற்காலத்தில் நூலகமாக இயங்கியது. இதுதவிர பல்வேறு அறைகள் பல்வேறு மாணவர் கழகங்கள், சங்கங்கள் இயங்கும் அறைகளாக இருந்தன; இருக்கின்றன.

ஆரம்பத்தில் முழுப்பாடசாலையாகவும் இருந்த இக் கட்டிடத் தொகுதியின் இப்போதைய பாவனை குறைவாக உள்ளபோதும் அது 125 ஆண்டுகளாகக் கல்லூரியின் முக்கிய பகுதியாகவே இருந்து வருகிறது.

# 5

# எம்மன்னை நின்னலம் மறவோம்

ஆவணப்படுத்தல், மரபுரிமை, சமூக வரலாறுகள் சார்ந்த ஆர்வங் கொண்ட செயற்பாட்டாளன் என்ற வகையில் சில தகவல்களையும் அவை தொடர்பான சில கருத்துக்களையும் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். இவை எனது தனிப்பட்ட கருத்துக்கள். எவரையும் குறை சொல்வது எனது நோக்கமல்ல. எமது எதிர்காலச் செயற்பாடுகளில் மரபுரிமை சார்ந்த பொறுப்புணர்வு அதிகரிக்க வேண்டும் என்ற வகையில் இவற்றைப் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். நான் துறைசார் வல்லுனன் அல்ல என்ற பொறுப்புத் துறப்புடனேயே இக்கருத்துக்களை முன்வைக்கிறேன்.

நான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 1993 முதல் 2001 வரையில் கல்வி கற்றிருக்கிறேன். அக்காலத்திலேயே இந்த மரபுரிமை மண்டபம் நூற்றாண்டினைக் கண்டது. ஆனால் அது குறிப்பிடத்தக்க கவனம் பெறவில்லை. குறிப்பான நிகழ்வுகளோ மலர் வெளியீடுகளோ நடக்கவில்லை. பாடசாலையினதும் விடுதியினதும் பழைய மாணவர் சங்கத்தினதும் நூற்றாண்டு விழாக்கள் விமரிசையாகக் கொண்டாடப்பட்டு விரிவான மலர்கள் வெளியாகியுள்ளன. ஆனால் எமது கல்லூரியின் கட்டட மரபுரிமை சார்ந்து அத்தகைய கவனம் எதுவும் இருக்கவில்லை.

இந்துக் கல்லூரியின் இன்னொரு நூறாண்டு கண்டிருக்க வேண்டிய கட்டடம் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர் நெவின்ஸ் செல்வத்துரை வாழ்ந்த வீடு ஆகும்.[16] அந்த வீடு இருந்த இடத்திலேயே இப்போது சபாலிங்கம் மண்டபம் உள்ளிட்ட மூன்று மாடிக் கட்டடத் தொகுதி உள்ளது. குறித்த வீடு ஓரளவு

---

16 யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விடுதி நூற்றாண்டு மலர். 2010.

சிதிலமடைந்த நிலையினை அடைதிருந்தது என்ற வகையிலும் புதிய கட்டடத்துக்கான இடம் தேவைப்பட்டது என்ற வகையிலும் அதனை இடிப்பது தவிர்க்க முடியாததாக இருந்திருக்கலாம். ஆனால் அக்காலத்தில் மாணவர்களாக இருந்த எமக்கே அது நெவின்ஸ் செல்வத்துரையின் வீடு என்பது தெரிந்திருக்கவில்லை. அதாவது எமது கல்லூரியின் மரபுரிமை சார்ந்த விழிப்புணர்வு மாணவர்களுக்கு இருக்கவில்லை. அத்துடன் அந்த வீட்டினை இடிப்பதற்கு முன்னர் அது விரிவாகவும் முறையாகவும் ஆவணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அந்த வீடும் வட்டத் தூண்களும் வளைவுகளும் கொண்ட கல்லூரியின் மரபுரிமை மண்டபத்தின் சாயல்களைக் கொண்ட பழமையான கட்டடத் தொகுதியாக இருந்தது. ஆனால் அந்த வீடு தொடர்பான எந்த ஆவணங்களும் எஞ்சவில்லை.

இப்போதுள்ள நிர்வாகக் கட்டடத் தொகுதியினை அமைப்பதற்காகப் பழைய வகுப்பறைகள் இடிக்கப்பட்டன. அவை தொடர்பான ஆவணப்பதிவுகளும் இப்போது எம்மிடம் இல்லை. எத்தனை வகுப்பறைகள் இருந்தன; என்ன அளவுப் பிரமாணங்களில் அவை இருந்தன என்ற எந்தத் தகவல்களும் இல்லை. அந்த வகுப்பறைகள் எப்போது கட்டப்பட்டன என்ற தகவலையே உறுதியாகப் பெற முடியாதுள்ளது. (அந்த வகுப்பறைகளில் இருந்து கல்வி கற்றவன் என்ற வகையில் அவை சுண்ணாம்புக் கட்டடங்கள் என்பதையும் மரபுரிமை மண்டபத் தொகுதியின் கட்டடத்தைப் போன்றே சுண்ணாம்பு, மரத் தூண்களையும் கதவுகளையும் கொண்டிருந்தன என்பதைப் பதிவு செய்ய முடியும். ஞானசேகரம் மண்டபத்துக்குச் சமாந்தரமான தூரம் வரையும் கதவுகளைக் கொண்ட மூடிய அறைகளும் அதற்கப்பால் அரைச்சுவர்களைக் கொண்ட திறந்த வகுப்பறைகளும் அமைந்திருந்தன.)

அத்துடன் மேற்படி புதிய நிர்வாகக் கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டபோது எமது மரபுரிமை மண்டபத் தொகுதியின் அமைப்பும் அமைவிடமும் கவனத்தில் எடுக்கப்படவில்லை. மரபுரிமை தொடர்பான கவனம் இருந்திருப்பின் நிர்வாகக்

கட்டடத் தொகுதி மரபுரிமைக் கட்டடத் தொகுதியுடன் இணைந்ததாக அதாவது ஞானசேகரம் மண்டபத்துக்குச் சமாந்தரமாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு அமைத்திருந்தால் மரபுரிமைக் கட்டடத் தொகுதியினையும் புனரமைத்து அதன் பகுதிகளையும் நிர்வாகச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் எதிர்காலத்தில் பயன்படுத்தும் நிலை உருவாக்கப்பட்டிருக்கும்.

அத்துடன் கோவில் விமானம் நேரே முழுமையாகத் தெரியும் வகையில் கல்லூரி வாசல் உருவாகி இருக்கும். கல்லூரியின் ஆரம்பக் கட்டடத் தொகுதிகள் கட்டப்பட்டபோது இருந்த சமச்சீர்த்தன்மையும் தோற்றப் பொலிவும் பேணப்பட்டிருக்கும். அத்துடன் கோயில் மண்டபத்துக்குச் சமாந்தரமாகக் கல்லூரி வீதிக்கு அருகில் ஒரு நூலக, வகுப்பறைக் கட்டடத் தொகுதியினையும் உருவாக்கியிருக்க முடியும். அத்துடன் பழைய நிர்வாகக் கட்டடத்தினை நீக்கியிருக்கலாம். இந்த அமைப்பில் மரபுரிமைக் கட்டடத் தொகுதியிலிருந்து புதிய சபாலிங்கம் மண்டபத்தினைக் கொண்ட மூன்று மாடிக் கட்டடத் தொகுதி வரையான நீண்ட, அழகாகப் பேணக்கூடிய, காற்றோட்டமான செவ்வகத் திறந்தவெளியும் அமைந்திருக்கும். ஒரு புறத்தில் நிர்வாக, நூலகக் கட்டடத் தொகுதிகளும் மறு புறத்தில் கோவிலுமாகச் சமச்சீரான கல்லூரி அமைப்பு உருவாகியிருக்கும். இந்தக் கட்டடங்கள் அனைத்தையும் மரபுரிமைக் கட்டடத் தொகுதியின் கட்டடக்கலைப் பாணியுடன் பொருந்தி வரும் வகையில் வட்ட வடிவத் தூண்கள், செவ்வகத் தூண்கள், வளைவுகளுடன் கூடிய சுவர்கள், கதவுகளுடன் அமைத்திருக்க முடியும்.

ஆனால் நாமோ மரபுரிமைக் கட்டடத் தொகுதியுடன் எந்த வகையிலும் பொருந்தாத வகையில் நிர்வாகக் கட்டடத்தினை அமைத்ததோடு அக்கட்டட அமைப்பிற்காக திறந்த வெளி மேடையினையும் சிதைத்து வைத்திருக்கிறோம். பின்னர் குறித்த மேடையில் சிவலிங்கம் ஒன்றினை அமைப்பித்துக் கல்லூரியின் ஆகப்பழைய மரபுரிமைக் கட்டடத்தைக் காண முடியாத

வகையில் மறைத்தும் இருக்கிறோம். சிலைகளும் கட்டடங்களும் பாதைகளும் எந்தச் சமர்ச்சீர்த்தன்மையும் இன்றி ஒரு சேரிப்புறம் உருவாகி வருவது போல அமைக்கப்பட்டுள்ளன.

நிர்வாகக் கட்டடத்தினை உருவாக்கியபோது அதனை மரபுரிமைக் கட்டடத் தொகுதியுடன் இணைத்து உருவாக்க முடியாமைக்கு ஆயிரம் காரணங்கள் இருக்கலாம். ஆனால் வகுப்பறைகள் இடிக்கப்பட்ட பின்னர் பழைய விறாந்தையைச் செம்மைப்படுத்தி வகுப்பறைகள் அமைக்கப்பட முன்னர் இருந்த வடிவத்துக்கு அதாவது 125 ஆண்டுகளின் முன்னர் அமைத்த வகையிலாவது செம்மைப்படுத்தியிருக்கலாம் அல்லவா? இன்று வரை அந்த விறாந்தை அரை குறையாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது. அது குறித்த எந்தப் பிரக்ஞையும் எமக்கு இல்லை என்பதே உண்மை.

பழைய வகுப்பறைக் கட்டடங்கள், நெவின்ஸ் செல்வத்துரையின் வீடு போன்றவை அழிக்கப்பட்ட நிலையில் எமது பாடசாலையின் ஒரே மரபுரிமைச் சின்னமாக எஞ்சிக் காணப்படுவது இந்த மரபுரிமை மண்டபமும் ஞானசேகரம் மண்டபமும் இணைந்த கட்டடத் தொகுதியே. இவற்றை இடித்துச் சிறிய அளவில் அமைப்பதற்கான திட்டமும் முன்னைய பாடசாலை நிர்வாகத்திடம் இருந்ததாக அறிய முடிகிறது. அந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தால் எக்காலத்திலும் மீளமைக்க முடியாத பெரும் இழப்பாக முடிந்திருக்கும். அத்தகைய அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெற்று விடவில்லை என்பது ஆறுதலளிக்கிறது.

மரபுரிமை பேணுதல் என்பது பழையவை அனைத்தையும் எந்த மாற்றமும் முன்னேற்றமும் இன்றி அப்படியே பேணுவதல்ல. பழையன கழிதலும் புதியன புகுதலும் பல சமயம் தவிர்க்க முடியாதவை. அவ்வகையில் தொடர்ந்து பேண முடியாதவற்றையும் காலப்பொருத்தமற்றவற்றையும் நீக்குவதும் தவிர்க்க முடியாததே. ஆனால் தொடர்ந்து பேணக்கூடிய கட்டட மரபுரிமைகளை இடித்துவிட்டுப் புதியவற்றைக் கட்டிக் கொள்வது அறிவுடைமை ஆகாது.

ஆயினும் அண்மைய ஆண்டுகளில் கல்லூரியின் மரபுரிமை சார்ந்து ஓரளவு கவனமும் விழிப்புணர்வும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலை வரலாற்றுத் துறையைச் சேர்ந்தவரும் கல்லூரியின் பழைய மாணவருமான பாக்கியநாதன் அகிலன் கல்லூரியின் மரபுரிமை சார்ந்து கட்டுரைகளை எழுதியும் கருத்துக்களை முன்வைத்தும் விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகிறார். *Prayer Hall: The Heritage Building Complex of Jaffna Hindu College* எனும் சிறு ஆங்கில நூலொன்றையும் 2014 நவம்பரில் அவர் வெளியிட்டுள்ளார். அவரது வகுப்பினரின் ஒன்றுகூடலில் வெளியிடப்பட்ட அந்த நூல் தனிப்பட்ட சுற்றுக்காக வெளியிடப்பட்டதால் பொது விற்பனைக்கு வரவில்லை. அதனைத் தமிழில் மொழிபெயர்த்து இவ்வாண்டில் வெளியிடவுள்ளதாக அறிய முடிகிறது. இந்நூல் மரபுரிமை, கலைவரலாற்றுக் கண்ணோட்டத்திலான ஆவணப் பதிவாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் கட்டடக் கலைஞரும் பழைய மாணவருமான சிவசாமி குணசிங்கம் மரபுரிமைக் கட்டடத்தினை ஆவணப்படுத்தி உள்ளதோடு அதனைச் சீரமைப்பதற்கான முன்மொழிவு ஒன்றையும் தயாரித்து வருகிறார். அத்துடன் மரபுரிமைக் கட்டடத் தொகுதி குறித்த மலர் ஒன்றினையும் தொகுத்து வருகிறார். குணசிங்கம் ஓர் கட்டடக் கலைஞர் என்ற வகையில் துல்லியமான வரைபடங்களையும் தகவல்களையும் அவரது நூலில் எதிர்பார்க்கலாம்.

எனது பங்கிற்கு நான் அறிந்த தகவல்களைத் தொகுத்து இச்சிறுநூலாக்கியுள்ளேன். இந்நூலில் வரலாற்று நிகழ்வுகள் சிலவற்றின் விபரங்களையும் நான் கல்விகற்ற காலத்தில் அவதானித்தவற்றையும் பதிவுசெய்துள்ளேன்.

மேலும் கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களும் அதிபரும் மரபுரிமை சார்ந்த சில செயற்றிட்டங்களை முன்னெடுக்க முயற்சிகள் எடுத்துள்ளதாகவும் தெரிய வருகிறது. யாழ்ப்பாணப் பழைய மாணவர் சங்கத்தினர் பாடசாலையின் மரபுரிமைச் சின்னங்களையும் ஆவணங்களையும் கொண்டதான

அரும்பொருட் காட்சியகம் ஒன்றை அமைக்கும் முயற்சியினைத் தொடங்கியிருந்தனர். அம்முயற்சி அதிக சிரத்தையுடன் முறைப்படி தொடரப்பட வேண்டும். கனடாப் பழைய மாணவர் சங்கத்தினரது மரபுரிமைக் கழகம் அமைக்கும் யோசனையும் முக்கியமானதொன்று. இவை எனக்குத் தெரிந்த செய்திகள். இவற்றை விடவும் வேறு முயற்சிகளும் தொடங்கப் பட்டிருக்கலாம்.

ஆனால் கட்டுரைகளும் செயற்றிட்ட முன்மொழிவுகளும் நூல்களும் மரபுரிமைகளைப் பேணிக்காக்கப் போதுமானவை அல்ல. தொலைநோக்குள்ள செயற்றிட்ட முன்மொழிவுகள் நிலைபேறான செயற்பாடுகளாக முன்னெடுக்கப்பட வேண்டும். அத்தகைய செயற்பாடுகளைப் பாடசாலை நிர்வாகமும் பழைய மாணவர் சங்கங்களும் இணைந்து துறைசார் வல்லுநர்களின் ஆலோசனைகளையும் பெற்று வெளிப்படையாக முன்னெடுக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்துடன் மரபுரிமை மண்டபத்தின் வரலாற்றையும் முக்கியத்துவத்தையும் மாணவருக்கும் கல்லூரிச் சமூகத்துக்கும் உணர்த்துவதுடன் அதனைப் பேணிக்காக்கவும் கொண்டாடவும் ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.

# நன்றிகள்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்ற பெயர் சூட்டப்பட்டுப் பிரதான கட்டடத் தொகுதியும் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்ட நாளின் 125 ஆவது ஆண்டு நிறைவினைக் குறிக்கும் வகையில் ஓர் இணையவழி நிகழ்வினை நடாத்துவதாகவே முதலில் திட்டமிட்டிருந்தோம். ஆனால் அந்த நிகழ்வினைப் பாடசாலைச் சமூகம் குறித்த மண்டபத்திலேயே நடத்த முன்வந்தமையால் ஐந்தே நாட்களில் சிறுநூலாக அவசரமாகத் தொகுத்திருக்கிறேன். எனது 'யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தொடக்கமும் வரலாறும்' நூலின் சில பகுதிகளும் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இணைய நிகழ்வாக இதனைத் திட்டமிட்டவர் சுஜீவன் தர்மரத்தினம். அவரே பின்னர் கல்லூரி அதிபருடனும் பழைய மாணவர் சங்கத்தினருடனும் உரையாடி இதனை ஒரு நூலாக மாற்றத் தூண்டுதலாக இருந்தார். சுஜீவனுடன் இணைந்து அரவிந்தன் ரமணன், உதயராசா ஜெல்சின், சஜீவன் ராஜா ஆகியோர் மரபுரிமைக் கட்டடத்தினைப் புகைப்படங்காகப் பதிவு செய்தும் அளவெடுத்துப் பருமட்டான படங்களாக்கியும் ஆய்வுப் பணி செய்திருந்தனர். அவர்களது களப்பணியே இந்நூலைச் சாத்தியமாக்கியது. பார்த்தீபன் குணரத்தினம் சில பழைய புகைப்படங்களைத் தந்துதவினார்.

களப்பணியை அவதானித்த கல்லூரி அதிபர் செந்தில்மாறன் இரத்தினம் கட்டடத்தின் வரைபடங்களைத் தந்துதவினார். குறித்த வரைபடங்களை வரைந்த குணசிங்கம் சிவசாமி அவற்றை இந்த நூலில் பயன்படுத்த மனமுவந்து அனுமதி அளித்தார். அவர் எழுதிக் கொண்டிருக்கும் நூல் வெளிவர முன்னரேயே இன்னொரு நூலுக்கு அவரது வரைபடங்களை தந்துதவிய அவரது பெருந்தன்மையினாலேயே

இச்சிறுநூல் தன்னளவில் முழுமைபெறுகிறது.

இந்நூலை எழுதிமுடித்த நிலையிலேயே அகிலன் பாக்கியநாதன் ஏற்கனவே ஆங்கிலத்தில் ஒரு நூலை எழுதிய தகவல் கிடைத்தது. அந்த நூல் இன்னும் வாசிக்கக் கிடைக்கவில்லை. பாதை அகலிப்பு வேலைகளால் கட்டடம் உடைக்கப்பட இருந்த காலத்தில் அதற்கெதிராகக் குறிப்பிடத்தக்க பணியினை அகிலன் செய்திருந்தார். அக்காலம் தொடர்பான சம்பவங்களை விபரித்ததோடு தனது கட்டுரையை இணைப்பாக வெளியிட அவர் அனுமதியளித்தார்.

கட்டட அமைப்புத் தொடர்பான எனது சந்தேகங்களைத் தீர்த்து உதவியவர் கட்டடக் கலைஞரும் சக ஆவணமாக்கச் செயற்பாட்டாளருமான மயூரநாதன் இரத்தினவேலுப்பிள்ளை. இவ்வாண்டின் தொடக்கத்தில் அவருடன் சேர்ந்து இந்தக் கட்டடத்தின் சில அமைப்புக்களைப் பார்வையிட்டிருந்தேன்.

சிவசாமி குணசிங்கத்தின் வரைபடங்கள் தற்காலக் கட்டட அமைப்பில் உள்ளன. அவற்றை ஆரம்பகாலத் தோற்றமாக கதிர்காமநாதன் செல்வராஜா மாற்றி உதவினார். ஒரே இரவில் அட்டைப்படத்தினைப் பிரசாத் சொக்கலிங்கம் வடிவமைத்துத் தந்தார். இந்த நூலினை அச்சுவாகனமேற்றும் பொறுப்பினை ஜீவநதி ஆசிரியர் பரணீதரன் கலாமணி பொறுப்பேற்றார்.

இத்தனை பங்களிப்பாளர்களாலேயே இச்சிறுநூல் மிகக் குறுகிய காலத்தில் சாத்தியமாகியது. இந்நூலின் நிறைகள் இவர்கள் அனைவரினுடையதுமே. கல்லூரியின் மரபுரிமை மண்டபம் பலரது பங்களிப்பினால் சாத்தியமானதைப் போல இதுவும் ஒரு கூட்டு முயற்சியே. இவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இந்நூலின் குறைகளுக்கு நானே பொறுப்பாவேன். தகவற் பிழைகளையையும் விடுபடல்களையும் சுட்டிக் காட்டினால் எதிர்காலத்தில் திருத்திக் கொள்வேன்.

**தில்லைநாதன் கோபிநாத்**

2020-09-28

## பின்னிணைப்பு 1

1895 ஒக்ரோபர் 2ஆம் திகதிக்குரிய The Hindu Organ (இந்து சாதனம்) இதழில் வெளியான செய்தியும் அறிக்கையும் அவற்றின் முக்கியத்துவம் கருதி முழுமையாகக் இங்கே தரப்படுகின்றன.

### THE JAFFNA HINDU COLLEGE

The inauguration of this Institution in the new Upstair Building took place on the night of the 28th ultimo in the presence of a large and distinguished assembly of Hindus from different parts of the Peninsula. That day will indeed, be a red-letter day in the annuals of Jaffna, as remarked in the Address of the Committee of the Saiva Paripalana Sabai, which we publish below. The number of people that assembled in the spacious Hall of the College, to take part in the functions, was unprecedentedly large, and thousands of people had to stand outside for want of accommodation inside the Hall. The Honourable P. Coomaraswamy who was carried in a procession accompanied by more than 5000 people with music and fireworks, from the Town to Vannarponnai, a distance of nearly one mile and a half, entered the College Hall at 9pm after having opened the main door with a silver key which was handed to him by the vice-President of the Sabai. His reception was very cordial and enthusiastic; and after he had taken his seat on the dais with his brother-in-law Mr

Ratnasapapathy on his right, the proceedings commenced with the reading of the Address of Welcome by Mr A Sapapathy on behalf of the Saiva Paripalana Sabai. Mr Coomaraswamy replied at length and spoke in eloquent and eulogistic terms on the noble work of the Sabai in providing for the English education of the Hindu youths in a College of their own, wished all prosperity to the College which, he said, deserved the support of the Hindus throughout the length and breadth of Ceylon, and offered to place at the disposal of the Committee of the Sabai Rs 2000 to found two scholarships, one for proficiency in the Tamil language and the other in English. He also announced that half this amount he would contribute from the surplus funds of the Temple of which he was manager in the hope that other managers of Temples would follow his example and utilise the surplus temple funds for educational purposes, and the other half would be his private subscription, and concluded by saying that Mr Ratnasapapathy also offered to pay Rs 1000 to found a scholarship in the name of his late father, Navasivaya Mudaliyar. Mr Advocate Nagalingam, the vice-President of the Sabai, followed with an eloquent and earnest speech in Tamil, thanking the Honourable Coomaraswamy and Mr Ratnasapapathy for their generous contributions and the audience for their kind presence and sympathy with that movement and made an impressive appeal for support to the College from the Hindu community generally. The local subscriptions from the 28th ultimo to this day, towards the College fund, amount to about Rs 6000. It is hoped that before the functions are over which will continue for a whole week Rs 10,000 will have been collected.

The Address was as follows: -

To

The Honourable

P. CoomaraSwamy M L C

&c &c &c

Jaffna

Honourable Sir,

1. We the undersigned, on behalf of the Saiva Paripalana Sabai of Jaffna, beg most respectfully to offer you a hearty welcome as the President of the Sabai and as the worthy Representative of the Tamils in the Legislative Council. We cannot sufficiently thank you for the great interest you take in the promotion of the objects of this Sabai and for the ready response you have given to our invitation to be present on this important occasion. Your connection with the Sabai as its President has been a tower of strength to us; and your presence here tonight affords us very great pleasure, and delight; and will be the means of infusing new life and energy among the members of this Sabai and the Hindus of Jaffna and of rousing them to further exertions in the cause of our ancient religion and the promotion of the public good. This day will be, we feel sure, considered a red letter day in the annals of Jaffna, not only by reason of your participation in these interesting functions, but also on account of this unique event – the inauguration of this Institution which has been during the last five years called the Hindu High School, Jaffna, and which will, from this day, be known by the name of the Jaffna Hindu College, in the upstair building, erected by the Saiva Paripalana Sabai at a cost of about Rs 10,000 and in the presence of this large and distinguished assembly of Hindus from all parts of

Jaffna.

2. The Sabai has always attached the greatest importance to this College in the sphere of their operations, as it has been the means of raising the standard of English education in Jaffna, and as it also now enables the Hindu youths, who had had to depend entirely upon Christian Missionary Institutions, to receive their English education without interference with their religious belief. Our humble efforts, with your powerful co-operation, to have this Institution registered by the Department of Public Instruction as a grant-in-aid school, has been crowned with success; and the first examination for Government grant will be held here next month. You will also be delighted to learn that our application for the affiliation of this College to the Calcutta University has been just allowed.

3. The present status of this College as one of the leading educational institutions in the Island with nearly 400 boys on the roll, is a perfect contrast to its condition in 1890 when it was started in a temporary shed in this very site and when a reception was given in it to your illustrious brother and immediate predecessor in the Presidency of this Sabai and the Tamil seat in the Legislative Council, Mr Ramanathan C.M.G. to whom also we take this opportunity of extending our thanks for the interest he has always evinced in the welfare of this Institution. With God's blessing which is manifest in the success of our undertakings, with your great and deserved influence to guide and help us, and with the co-operation and support of the Hindu community at large, which we have now every right to expect, seeing that we are able to show a good account of our stewardship, we hope not only to complete the wings of this Hall which will then be an ornament to Jaffna, but also to endow the College and make it a permanent, useful and efficient educational Institution in the Island.

4. It will not be, we venture to hope, out of place to say a word on the future educational policy of the Government as set forth in the Circular lately issued to the Managers of schools by the acting Director of Public Instruction. While fully approving his proposals regarding the introduction of "conscience clause" into the Revised Code for 1896 and the necessity of appointing only certificated teachers in all aided English schools, we must strongly protest against the scale of minimum fees fixed for Jaffna schools by the Director, which are, to say the least, exorbitant and prohibitory, and will have the effect of considerably reducing the number of boys in aided schools in this District and of encouraging the establishment of private schools. The proposed scale is more than double the rate of fees now charged in the schools of this Peninsula. We, therefore, beg that you may be pleased to urge on the Government the necessity of non-interference in the matter of school fees, or, if interference be considered necessary to fix the scale of minimum fees at a rate not more than half the proposed rate.

5. Thanking you, Sir, once more for your presence here, in response to our special invitation, at considerable loss and inconvenience to yourself, and wishing that you may be blessed with long life, health and happiness, to carry on your noble work in the cause of humanity, and more especially, in the cause of the Hindu Religion and Tamil Literature.

The Jaffna

Hindu College

Hall

28th September 1895

We beg to remain

Honourable Sir,

Your most humble Servants

S. Nagalinam

Vice-President

V. Casipillai

Secretary

T. Kailasapillai

Asst Secretary

S.T.M. Pasupathy Chettiar

Treasurer

A. Sapapathy

வை. ஆ. அம்பலவாணபிள்ளை

இ. மயில்வாகனம்

சி. இராமுப்பிள்ளை

Members of the Committee

# பின்னிணைப்பு 2

அகிலன் பாக்கியநாதன் எழுதிய "காலத்தின் விளிம்பில்" என்ற மரபுரிமைகள் தொடர்பான நூலில் இடம்பெற்றுள்ள இக்கட்டுரை அதன் முக்கியத்துவம் கருதி நன்றியுடன் முழுமையாக இங்கே மீள்பிரசுரமாகிறது.

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபம்

அறிமுகம்

உலகெங்கணும் மரபுரிமை (heritage) என்பது நாடுகள், தேசங்கள், இனக்குழுக்கள் ஆகியவற்றின் அடையாளமாக - அதன் வரலாறு மற்றும் பண்பாட்டின் சின்னங்களாக, அவற்றுக்கான தடையங்களாகவும் பார்க்கப்படுகின்றன என்பதுடன் அவர்களின் பொருளாதார அபிவிருத்திக்கான அடிப்படையாகவும் தொழிற்படுகின்றன. அதனாற்றான் நாடுகள் தோறும் மரபுரிமையைக் காக்கவும் - பேணவும் சட்ட ரீதியான செயற்பாடுகள் உள்ளிட்ட பலவகையான காப்புச் செயற்பாடுகள் உள்ளன. அதேநேரம் அவற்றின் மனித குல முதன்மை கருதி UNESCO முதலான சர்வதேச நிறுவனங்கள் பலவிதமான சர்வதேசச் சட்டங்கள் மற்றும் காப்புச் செயற்பாடுகளாலும் அவற்றைப் பாதுகாக்கின்றன.

ஆனால் உலக வங்கியின் அறிக்கை ஒன்று கூறுவதுபோல மூன்றாம் மண்டல நாடுகளில் அபிவிருத்தியின் பெயரால் மரபுரிமைகள் பாரிய அச்சுறுத்தலுக்குள்ளாகின்றன. மேற்படி கணிப்பீடு இலங்கைக்கு - அதிலும் குறிப்பாக இலங்கையில்

தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கு அதிகம் பொருந்தும். உள்ளூர் மக்களது விழிப்புணர்வின்மை - அசட்டை- உசாதீனம் என்பனவும் அரசின் மறைமுகமான பண்பாட்டு - வரலாற்று தடய அழிப்புச் செயற்பாடுகளும் வேகமாக இப்பகுதிகளின் இயற்கை மற்றும் பண்பாட்டு மரபுரிமைகளை வேரோடு பிடுங்கி எறிதலுக்கான ஏதுநிலைகளாக தொழிற்பட்டு வருகின்றன. குறிப்பாகக் கடந்த ஆண்டுகளில் இலங்கையின் எந்தவொரு சட்டவிதிகளையும் பின்பற்றாமல் வடக்கிற் செய்யப்பட்ட வீதி அகலிப்புச் செயற்பாடுகள் யாழ்ப்பாண நகரத்துள் இருந்த பழைய ஒல்லாந்த நகர அமைப்பு - அதன் கட்டுமானங்கள் உட்பட பல்வேறு மரபுரிமைகளையும் - இடங்களையும் அதற்கான மாற்றேற்பாடுகள் பற்றி முன்வைக்கப் பட்ட எந்தக் கருத்துக்களையும் காதில் வாங்காது அழித்தது.

இந்த வீதியகலிப்பின் ஒரு பகுதியாக இருந்த கே.கே.எஸ். வீதியகலிப்பு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தின் ஒரு பகுதி உட்பட 19 ஆம் - 20 ஆம் நூற்றாண்டு யாழ்ப்பாண எழுச்சியின் மையமாக இருந்த வண்ணார் பண்ணையின் நாவலர் பாடசாலை, சிவதொண்டன், கில்னர் மண்டபம், வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் உட்பட பல பண்பாட்டு வரலாற்றிடங்களை பகுதியாகவோ அல்லது முழுதாகவோ பிடுங்கி எடுக்கத் தயாராகி இருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத் துறை உட்பட்ட- வர்களது தொடர்ச்சியான எதிர்ப்பு மத்தியில் இப்போதைக்கு அவை எஞ்சியுள்ளன. ஆனால், நூற்றாண்டுகளை கடந்த (இலங்கைச் சட்டப்படி 100 ஆண்டுகளைக் கடந்த பண்பாட்டு ரீதியாகவோ, வரலாற்று ரீதியாகவோ அல்லது கட்டடவியல் ரீதியாகவோ முக்கியத்துவமுடைய எந்த ஒரு கட்டடமும் கட்டட மரபுரிமையாக (architectural heritage) கோரப்படத்தக்கது.) பிரார்த்தனை மண்டபத்தைப் பாதுகாப்பதற்கான எமது முயற்சிகள் என்ன? இது தொடர்பில் இந்துக் கல்லூரியினரான எமது உத்தியோகபூர்வ நிலைப்பாடும், செயற்பாடுகளும் என்ன? எமது பாராமுகத்தின் அடிப்படைகள் யாவை?

### பிரார்த்தனை மண்டபத்தின் முக்கியத்துவம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முதல் கட்டடமாகவும் அதனால் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக் கட்டடங்களின் தாய்க் கட்டடமாகவும் காணப்படும் பிரார்த்தனை மண்டபக் கட்டடத் தொகுதி 1895 இல் திறந்து வைக்கப்பட்டது. அவ்வகையில் பிரார்த்தனை மண்டபக் கட்டடத் தொகுதி 120 வருடப் பழைமை வாய்ந்ததும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நெடிய பாரம்பரியத்தின் ஒரேயொரு வாழும் கட்டடவியற் சின்னமாகவும் இன்று காணப்படுகிறது.

காலனிய கால யாழ்ப்பாணப் பண்பாட்டு மறுமலர்ச்சியின் தலையாய சின்னங்களுள் ஒன்றான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பிரார்த்தனை மண்டபமானது யாழ்ப்பாண வரலாற்றின் பல முக்கிய நிகழ்ச்சிகளின் களமுமாகும். 1897 இல் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த சுவாமி விவேகானந்தர் இந்த மண்டபத்தில் நின்றுதான் வேதாந்தம் பற்றிய நீண்ட உரையை யாழ்ப்பாணத்தாருக்கு ஆற்றினார். 1906 இல் தேர்ந்த கலை வரலாற்றாசிரியர்களுள் ஒருவரான கலாயோகி ஆனந்த குமாரசாமி இம் மண்டபத்தின் நின்றுதான் தனது தந்தையின் யாழ்ப்பாணப் பூர்வீகத்தை நினைவுபடுத்திய பேருரை நிகழ்ந்தது. அதுமட்டுமின்றி தமிழிசை இயக்க முயற்சிகள் தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட முன்னரே பண்ணிசைப் பயில்வுகளுக்காக கல்லூரிக்கு அவர் 5000/- பணத்தைக் கொடுத்ததும் இந்த மண்டபத்திற்றான். யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் அழைப்பின் பேரில் 1927 இல் யாழ்ப்பாணம் வந்த மகாத்மா காந்தி உரையாற்றியதும் இங்குதான். அது மட்டுமின்றி பல்வேறு ஆளுமைகளின் உரைநிகழ்ச்சிகள், கதாபிரசங்கங்கள், இசை நிகழ்ச்சிகள் எனப் பலவற்றினூடாகவும் நவீன யாழ்ப்பாணத்தின் பொதுமக்கள் வெளியை (public sphere) கட்டமைத்த பண்பாட்டு மையங்களுள் ஒன்றாயும் இம் மண்டபம் திகழ்ந்தது.

இவற்றுக்கப்பால் கட்டடக்கலை ரீதியாகவும் பிரார்த்தனை மண்டபத்தின் இடம் வரலாற்று முக்கியத்துவம்

உடையது. அது காலனிய கால கலப்பொட்டு நிலையை (hybridity) கட்டடக்கலை ரீதியாகப் பகிர்ந்தது. அடிப்படையில் நவசெந்நெறிவாத (Neo classical) ஒழுங்கமைவை உடைய இக் கட்டடம் அவ்வகையில் ரோமானிய ரேஸ்கன் அடித்தளம் உடைய காலனிய வட்டவடிவத் தூண்கள் மற்றும் ரோமானிய பீடமுடைய தூண்கள், வளைவுகள், தடித்த சுவரமைப்பு என்பவற்றோடு விக்ரோறிய காலத்து ஆங்கிலக் கட்டடக்கலைப் பண்புகளின் கலப்புடன் காணப்பட்டன – குறிப்பாக கே.கே.எஸ். வீதிப் பிரதான வாயிலின் இருபுறமும் உள்ள தற்போது மூடப்பட்டுள்ள விசிறிப் பலகணியுடைய (fan lights) கதவுகள் இதற்கான சிறந்த உதாரணம் ஆகும். அதேநேரம் இதனோடு கூட்டிணைந்த உள்ளறைகள் கீழ் தளத்திலும், மாடியிலும் நெடிய தூண்களால் தாங்கப்படுகின்றன. இத் தூண்கள் மேற்கத்தைய மரபுசாராத திராவிடக் கட்டடக்கலை சார்ந்த எட்டுப்பட்டைத் தூண்களாக உள்ளன.

அதன் திறந்த வெளி நிறைந்த தன்மை, பாரிய திரளுருத் தன்மை வாய்ந்த கட்டடப் பகுதிகள் மற்றும் அதன் கட்டடக் கூறுகளைச் சமச்சீராக விநியோகம் செய்துள்ள முறைமை யாவும் கூட்டிணைந்து ஒரு பாரிய தன்மையையும் - கம்பீரத்தையும் மேற்படி கட்டடத்துக்கு வழங்குகின்றன என்பதுடன் கட்டட ரீதியாகவும், அதேநேரம் முகப்பிலுள்ள சரஸ்வதி - மயில் என்பவற்றோடு அமர்ந்த சிங்கங்கள் முதலான முகப்பலங்காரக் கூறுகளுடன் மேற்படி மேற்கத்தைய – உள்ளூர் கலப்பு நிலைப்படுத்தப்பட்டுள்ளது அல்லது காலனிய பின்னணியில் மரபும் - மேற்கத்தையமும் புதிய சமூக பண்பாட்டுப் பின்னணியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

### பிரார்த்தனை மண்டபத்தைக் காத்தலும் பேணலும்

இலங்கைக்கு மிக நீண்ட காலக் கல்வி வரலாற்றுப் பாரம்பரியம் காணப்படுகிறது. குறுகிய காலத்தில் உருவாகி நூற்றாண்டுகளைக் கடந்த பல கல்வி நிறுவனங்கள் எம்மிடையே

உண்டு. ஆனால் மிகச் சில பாடசாலைகளே பிரக்ஞைபூர்வமாகத் தமது பண்டைய வரலாற்றின் சின்னங்களாக தமது மூத்த கட்டடங்களைக் காத்து தமது பண்பாட்டுப் பெருமையினைப் பறை சாற்றுகின்றன. றோயல் கல்லூரி, கண்டி திரித்துவக் கல்லூரி முதலானவை இவற்றுக்கான சிறந்த உதாரணங்களாகும். அதேசமயம் யாழ்ப்பாணத்திலும் குறிப்பிடத்தக்க பாடசாலைகள் சில மிகவும் பிரக்ஞைபூர்வமாக பண்டைய கட்டடங்களைக் காப்புச் செய்கின்றன. எந்தவொரு புதியதும் அதற்கீடானது அல்ல என்பதை அவர்கள் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள். சில பாடசாலைகளோ தமது புதிய கட்டடங்களைக் கூடத் தம்முடைய பழைய கட்டடத்தில் இருந்து பெற்றுக்கொண்ட பண்புகளை தொடர வைப்பதனூடாக கட்டமைத்து ஒட்டுமொத்த பாடசாலைக்கும் கட்டட ரீதியான தனியடையாளத்தை ஏற்படுத்துகிறார்கள். அது அவர்களை மற்றவரிடம் இருந்து வேறுபடுத்தும் அவர்களுக்கேயான தனியானதும் தனித்துவ-மானதுமான ஒருமுகம் என்பதை அவர்கள் கற்றிருக்கிறார்கள்.

இவ்வாறான நிலைவரங்களுக்கு மத்தியில் இந்துக் கல்லூரியின் பெருமை மிக்க முதற் கட்டடமோ மெல்ல இனிச்சாகும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அதன் பண்பாட்டு வரலாற்று முக்கியத்துவம் என்பது இந்துக் கல்லூரியையும் தாண்டி, யாழ்ப்பாணாத்திற்கும் - ஒட்டுமொத்தத் தமிழர்களுக்கும் உரியதாகும். போரும் - எமது அலட்சியமும் அழித்தது போக எம்மிடம் எஞ்சியிருக்கும் மரபுரிமைச் சின்னங்கள் மிகச்சிலவே. அச்சிலவற்றில் பிரார்த்தனை மண்டபமும் ஒன்றாகும். அதனைப் பாதுகாத்தல் என்பது மேற் குறிப்பிட்ட யாவற்றுக்கும் செய்யும் மரியாதையாகும் என்பதுடன் எமது வருங்காலச் சந்ததியிடம் அதனைக் கையளிக்கும் ஒரு வரலாற்று பெருமை மிக்க செயற்பாடுமாகும்.

இந்தப் பின்னணியில் பிரார்த்தனை மண்டபம் தொடர்பில் பின்வரும் விடயங்களை கவனத்தில் எடுக்க வேண்டியவராக உள்ளோம்.

- அதனை முழுமையாகவோ பகுதியாகவோ உடைத்தல் என்ற முடிவை எக்காலத்திலும் எடுக்காது இருத்தல்

- முறையான தொழில்சார் கட்டடக் கலைஞர் ஊடான பேணுகையினைப் பெறுதல் மூலமாக கட்டடத்தை பாதுகாத்தல் (ஏனெனில் முறையற்ற பேணுகை முறை எனது விருப்புக்கு மாறாக அதனை விரைந்து அழித்துவிடும் - உதாரணமாக சுண்ணாம்புக் கட்டடத்தின் மேலாகச் சீமெந்தைப் பூசுதல் முதலானவை)

- இயன்றவரை அதன் மூச்சுவிடும் வெளியைப் பேணல் மூலமாக அதற்கான இருப்பிடத்தை சரியான வகையில் கொடுத்தல்

- அதன் முக்கியத்துவத்தை இடையறாது வலியுறுத்தும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை (உதாரணமாக முதல் கட்டட நாள் அல்லது பிரார்த்தனை மண்டப நாளைக் கொண்டாடுதல்) முன்னெடுத்தல்.

- அதனிஅயொரு பாடசாலை அரும்பொருளகமாக (School museum) அல்லது நூலகமாக மாற்றுவதன் ஊடாக அதன் அந்தஸ்த்தை உயர்த்தலும், பாவனையை வரையறுத்தலும்.

முடிவுரை

சுவாமி விவேகானந்தர் தனது யாழ்ப்பாண உரையின் போது கூறிய ஒரு விடயத்தை பிரார்த்தனை மண்டபத்தை காத்து வருங்காலத்திடம் அதன் பண்பும் மதிப்பும் கெடாமல் ஒப்படைத்தலை முன்னிறுத்தி இங்கே நினைவு கூர விரும்புகிறேன்.

**நமது செயல்கள் நமது வருங்காலச் சந்ததிகளால் மதிப்போடு நினைவு கூரத் தக்கனவாக இருக்க வேண்டும்.**

# உசாத்துணை


1. *The Hindu Organ* இதழ்கள் *(1894, 1895)*
2. *The Jaffna Hindu College Calendar 1910*
3. பசுபதிச் செட்டியார் நூற்றாண்டு நினைவு மலர். *1956.*
4. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நூற்றாண்டு மலர். *1994.*
5. அமரர் சின்னத்தம்பி நாகலிங்கம் அவர்களின் நூற்றாண்டு நினைவு மலர். *1997.*
6. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விடுதி நூற்றாண்டு மலர். *2010.*
7. *Now I'm talking: Life lessons from a Telecommunications Pioneer. 2015. (Vijendran Watson)*
8. *125* ஆவது ஆண்டு நிறைவு மலர். *2015.*
9. காலத்தின் விளிம்பு. *2015. (*பாக்கியநாதன் அகிலன்*)*
10. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தொடக்கமும் வரலாறும். *2020. (*தில்லைநாதன் கோபிநாத்.*)*


HINDU COLLEGE

Honourable Sir,
Your most humble Se

The Jaffna
Hindu College
Hall
28th September
1895

S. Nagalinam
Vice-President
V. Casipillai
Secretary
T. Kailasapillai
Asst: Secretary
S. T. M. Pasupathy Chettiar
Treasurer
A. Sapapathy
வை. ஆ. அம்பலவாணபிள்ளை
இ. பயில்வாசகம்
சி. இராமுட்பிள்ளை
Members of the Committee